# இயேசுவின் உயிர்த்தெழுதலை பற்றி சம்மந்தப்பட்ட (சார்ந்த) கேள்விகள் - நிகழ்ச்சி 2

**அறிவிப்பாளர்**: 2000 ஆண்டுகளுக்கு மேலாக, கிறிஸ்தவ சபைகளின் கூற்று என்னவென்றால், அவருடைய வாழ்வின் இறுதியில், நசரேயனாகிய இயேசு சிலுவை மரணத்தை அடைந்து, சகல மரியாதையோடு அடக்கம், பண்ணப்பட்டு அவர் மூன்றாம் நாளில், உயிரோடு எழுந்தார் என்பதே.

**டாக்டர் கிரேக் A ஈவான்ஸ்**:.அதற்கான ஆதாரங்கள் உள்ளது, அதற்கான சாத்தியகூறுகள் உள்ளது, என்னை பொறுத்தவரை எல்லா காரியங்களும் தெள்ளத்தெளிவாக இருக்கிறது, இவை நிர்பந்தைக்கப்படுவது போல காணப்படுகிறது.

**அறிவிப்பாளர்**: ஆனால் சிலருடைய கருத்து இயேசு சிலுவையில் மரிக்கவில்லை என்பதாகும், அவர் அங்கு சுயநினைவை இழந்து கல்லறையில் அவர் சரியானார் என்கின்றனர். சில நவீன கால ஞானிகளின் இயேசுவின் சரீரம் சிலுவையிலிருந்து இறக்கப்பட்டு, குப்பையில் தூக்கி எரியப்பட்டது, காட்டு நாய்கள் அதை தின்றதாக கூறுகின்றனர். இயேசுவின் உயிர்த்தெழுதலின் தோற்றம் என்பது வெறும் ஒரு கட்டுக்கதை அல்லது பிரம்மை என்கின்றனர் அது உண்மையில், இயேசுவின் வெளிப்பாடு அல்ல என்கின்றனர்.

**டாக்டர் எட்வின் யமவ்ச்சி**:..சரி, ஒருவேளை உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால், அதை பற்றி நாம் பேச வேண்டிய அவசியம் இல்லை. கிறிஸ்தவ மார்க்கம் என்ற ஒன்று தோன்றியிருக்காது.

**டாக்டர் கேரி ஹேபெர்மேஸ்**:..நான் பத்து வருடங்கள் இறைநம்பிக்கையற்றவனாக இருந்தேன். எனக்கு, வாழ்க்கைக்கு ஏதாவது அர்த்தம் இருக்கிறதா என்ற கேள்வி இருந்தது. நான் யோசித்திருக்கிறேன், நான் அடக்கம்பன்னப்படும்போது, என் கல்லறையின் மேல் இலைகள் பறக்கும் அவ்வளவுதான. அல்லது ஏதாவது அர்த்தம் இருக்கிறதா? எண்ணெய் பொறுத்தவரை, நான் உயிர்த்தெழுதலை பற்றிய ஆராய்ச்சியில் தேறினவன். உங்களுக்கு தெரியுமா? இந்த ஆராய்ச்சியினால் என்ன நடக்கும் என்று நான் யோசித்த நாட்கள் உண்டு. ஆனால் இறுதியான முடிவு என்னவென்றால், அவை என்னை வெளியே கொண்டுவந்தது, நம்பிக்கையற்ற நிலையை மாற்றியது. என்னுடைய, கருத்து வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் உள்ளதென்று எடுத்துரைப்பது உயிர்த்தெழுதல் தான். இயேசுகிறிஸ்து மரணத்திலிருந்து உயிர்த்ததினால் நமக்கு நித்தியத்தின் நிச்சயம் உண்டாகிறது.

**அறிவிப்பாளர்:** உலக மற்றும் கிறிஸ்தவ உபகரணங்களில் இருந்து வரலாற்று ஆதாரங்களின் சோதனைகள் மூலம் புலப்படும் காரியங்கள் என்ன?

**கிரேக் A ஈவான்ஸ்**:.இயேசுவை இஎசுவாகவே இருக்க அனுமதிக்க வேண்டும். அவர் தம்மை குறித்து கூறிட இடமளித்து அவராகவே இருக்க வாய்ப்பளிக்க வேண்டும். இல்லாவிட்டால் நீங்கள் உங்களுடைய இஷ்டப்படி வரலாற்றில் இயேசுவை பற்றி

சொல்லப்பட்டவைகளை உங்களுடைய கற்பனை படி மாற்றிக்கொள்வீர்கள். அப்போது நீங்கள் உங்களை போன்ற ஒரு சாதாரண நபராக இயேசுவை காண்பித்திடுவீர்கள்.

**அறிவிப்பாளர்:** இயேசு உண்மையாகவே மரணத்திலிருந்து உயிர்த்தார் என்பதை நிருபிக்கும் ஆதாரங்கள் உங்கள் வாழ்வில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தும் என்கிறீர்கள்?

**டாக்டர்** டேரல் பாக்:.இயேசு தம்மை குறித்து கூறியது உண்மையென்றால், நாம் அனைவரும் அதை ஏற்றுக்கொள்ள கடமை பட்டிருக்கிறோம், அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது அசௌகரியமானதாக இருக்கும்.

**அறிவிப்பாளர்:** இந்த விசேஷித்த ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சிக்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம் உலக தரம் வாய்ந்த வரலாற்று நிபுணர்கள், இறையியலாளர்கள், புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் சொல்வதை கேளுங்கள்.

*****

டாக்டர். ஜான் அன்கேர்பெர்க்: வரவேற்கிறோம்! இயேசு சகல மரியாதையுடன் அடக்கம் பண்ணப்பட்ட பிறகு உயிர்த்தெழுந்தார் என்பதை நிருபிக்கும் நிர்பந்தமான வரலாற்று ஆதாரங்கள் இருக்கிறதா? இந்த முக்கிய கேள்விக்கு பதிலளிக்க நாம் பெரும்பாலான விர்மசிக்கும் மேதைகள் ஒப்புக்கொண்ட இயேசுவின் வாழ்வை குறித்து 12 வரலாற்று உண்மைகளை பரிசோதித்தறிய வேண்டும், அவர்களில் கிறிஸ்தவர்களும் மற்றவர்களும் இருந்தனர். இன்றைக்கு இந்த ஒவ்வொரு உண்மைகளுக்குமான உலக முறையின் ஆதாரத்தையும் ஆதிகால கிறிஸ்தவர்களிடம் இருந்த ஆதாரத்தையும் காண்பிக்க

விரும்புகிறோம். அதை பார்த்தபிறகுஇன்றைய நிபுணர்களால் எப்படி இதை ஏற்றுக்கொள்ள முடிந்ததென்று நீங்கள் நன்கு புரிந்துகொள்வீர்கள். இறுதியாக, வரலாற்றின் உண்மைகளுக்கான ஆதாரங்களை காண்பித்த பிறகு, இயேசு உயிர்த்தாரா இல்லையா என்ற கருத்தில் ஒரு பதிலை பெற நமக்கு உதவியாயிருக்கும்.

ஆரம்பமாக டாக்டர். கேரி ஹேபெர்மேஸ் சொல்வதை கேட்க விரும்புகிறேன் இவர் இயேசுவின் உயிர்த்தெழுதலை பற்றிய காரியத்தில் வரலாற்று ஆராய்ச்சியில் உலகிலேயே சிறந்தவராக மதிக்கப்படும் மாமேதை.

கேரி, நீங்க எழுதியிருக்கும் புத்தகத்தின் தலைப்பானது தி ஹிஸ்டாரிக்கள் ஜீசஸ், கடினமாக விமர்சிக்கும் மேதைகளால் ஒப்புக்கொள்ளப்பட்ட 12 வரலாற்று உண்மைகளின் தனித்துவமிக்க மேலோட்டத்தை அதில் கூறியிருக்கிறீர்கள். அந்த உண்மைகளை எப்படி கண்டுபித்தீர்கள் என்று சொல்லுங்கள்.

கேரி ஹேபெர்மேஸ்:.வெல், முதலில், இந்த காரியத்தை நான் செய்ததற்கு காரணம் விமர்சகர்களும் விசுவாசிகளும் ஒருமனப்பட்டு ஒன்றை சொல்ல நினைத்தேன், இந்த உண்மைகளை வைத்து இப்போது நாம் என்ன செய்கின்றோம்? 12டும் இயேசுவின் சிலுவை மரணத்திலிருந்து துவங்குகிறது. அவருடைய வாழ்வில் பல காரியங்கள் இருந்திருக்கிறது, ஆனால் இதிலிருந்து ஆரம்பித்து முடிவுவரை கொண்டுசெல்ல இருக்கிறேன். இந்த உண்மைகளை நான் ஒன்றுதிரட்டியத்தில், எந்தவித காரியத்தையும் தவிர்க்கவில்லை, 2 காரியங்களுக்கு இது பொருந்திடும்: முதலாவது காரியம்: இந்த உண்மையை விமர்சகரான ஞானிகள் பெரும்பாலானோர் ஏற்றுக்கொள்கின்றனர், அதாவது 90, 90 சதவிகிதத்தினர்.

இரண்டாவதாக, வித்தியாசமான கண்ணோட்டத்தில் பார்க்கும்போது இதனுடைய காரியங்கள் அனைத்தும் மாற்று கருத்துடையதாக இல்லாத உண்மைகளையே நான் முன்வைக்கிறேன். இதை பற்றி சொல்வதற்கு இதுவே சிறந்த விதமாக கருதுகிறேன்.

**ஆன்கர்பெர்க்:** இன்றைக்கு இந்த உண்மைகளில் ஐந்தை நாம் பார்க்கும்படி விரும்புகிறேன். முதலாவது உண்மை, இயேசு சிலுவை மரணத்தில் மரித்தார். இரண்டாவது, அடக்கம் பண்ணப்பட்டார், மூன்றாவது, அவருடைய மரணம் அவரது சீஷர்களுக்கு தைரியத்தை இழந்து அவநம்பிக்கை அடையச்செய்தது. நான்காவது, சில நாட்களுக்கு பிறகு இயேசு அடக்கம் பண்ணப்பட்டிருந்த கல்லறை காலியாக இருப்பது தெரிந்தது. ஐந்தாவது,சீஷர்களுக்கு ஏற்ப்பட்ட அனுபவங்கள் அவர் உயிர்த்தெழுந்த இயேசுவை தரிசித்ததாக நம்பும்படி செய்தது. இந்த உண்மைகளை நிருபிக்கும் வரலாற்று ஆதாரங்கள் இருக்கிறதா?

ஆல்ரைட், முதலில் முதலாவது உண்மையை பார்க்கலாம். இயேசு சிலுவை மரணத்தால் மரித்தார். இது வசனங்கள் மூலமாக தெரிய வந்தது என்று மட்டும் சொல்லாமல், கிறிஸ்தவரல்லாத 17 பேர்களுடைய அறிக்கையில் இருந்ததாக கூறுகிறீர்கள்.

கேரி ஹேபெர்மேஸ்:.வெல், எஸ், பவுல் இதை பற்றி வசனத்தில் கூறுகிறார், நான்கு சுவிசேஷங்கள், அப்போஸ்தலரில், உள்ளது. 17 உலக சாதனங்களும் இதோடு இருக்கிறது, அவற்றில் 12 அவருடைய மரணத்தை பற்றிய தெளிவான விளக்கத்தோடு இருக்கிறது, 17ல் 12 அவர் இவ்விதமாக மரித்தார் என்பதை தெளிவாக எடுத்துரைக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** சிலவற்றை சொல்லுங்கள்.

கேரி ஹேபெர்மேஸ்:.வெல், ஒகே, பிலாத்துவையும் திபேரியு ராயனையும் சொல்லி சில தகவல்களை பகிர்ந்துகொள்ளும் டாசிடஸ் இருக்கிறார். அதற்கு பிறகு பஸ்காவின் மாலையில் இயேசு சிலுவையிலறையப்பட்ட பிறகு கல்லெறியப்பட்ட தல்மூதின் சாட்சி இருக்கிறது. மற்றுமொரு யூத அதாரம், ஜோசெபஸ், பொந்தியு பிலாத்துவின் தலைமைத்துவத்தில் சிலுவையில் அறையப்பட்டவனாக கருதப்படுபவன். இன்னும் இரண்டு காரணிகள் இருக்கிறது, பெரிதும் ஒதுக்கப்பட்ட இரண்டு காரியங்கள், தாலஸ், கி பி 52ல் இருந்த கிரேக்க வரலாற்று எழுத்தாளர். மற்றும் பிளிகோன், ஹட்ரியன் சாம்ராஜ்யத்தில் இருந்த மனிதன். கி பி 120களில் எழுதியிருக்கிறார், டாசிடஸ் மற்றும் சியுடோனியஸ் இருந்த காலத்தில் இருந்தார். இருவருமே சிலுவையில் அறியப்பட்டபோது பூமியை சூழ்ந்த காரிருளை பற்றி கூறுகின்றனர்.

அடுத்ததாக மாறா பார் சேராபியோன், சீரிய எழுத்தாளர், அவர் தனது மகனிடம் இயேசு தனது போதனைகளுக்காக மரித்த ஒரு மகான் என்று கூறினார். அதோடு நமக்கு வசைகவிஞர்களும் வரலாற்று வல்லுனர்களும் இருக்கிறார்கள், லூசியன் என்பவர், இவர்தான், வரலாற்று பத்திபுகளை ஆதிகால பதிவுகளாக ஒன்றிணைத்து எழுதியவர், வரலாற்றை உண்டாக்குவது, எப்படி போன்ற யுக்திகளை கர்ப்பித்தவர். லூசியன் இயேசுவை பற்றி கிண்டலாக ஒன்றை கூறுகிறார், அவர் சிலுவையில் அறையப்பட்டார் அவருடைய சீடர்களுக்கு சகோதர அன்பில் நடக்கும் படியாக உபதேசித்தார். ஆனால் அந்த காரியங்களுக்காகவே அவர் மரித்தார் .

உலக வரலாற்றில் நமக்கும் இருக்கும் ஆதாரங்களில் சிலவற்றை பார்த்தோம், சரி, இதற்கு மெருகூட்டும் விதமாக, சிலுவை மரணத்தை

பற்றி தனித்துவமிக்க மருத்துவ தகவல்களை பற்றி பார்க்கலாம். அதென்னவென்றால், 15 ஆண்டுகளுக்கு முன்னதாக ஜெர்னல் ஆப் தி அமெரிக்கன் மெடிக்கல் அசோசியேஷன் குழுவினர் ஒரு அறிக்கையை வெளியிட்டனர் - ஒரு போதகர், 2 மருத்துவ நிபுணர்கள் - சிலுவை மரணத்தை பற்றி எழுதினார்கள் இந்த நபர்கள் தான் இயேசுவின் மரண சான்றிதழை எழுதியவர்கள்.

மருத்துவ துறையானது உலகின் ஆதாரங்களை டசன் கணக்கில் வைத்திருக்கிறது அவை புதிய ஏற்பாடோடு ஒத்திருக்கிறது இதற்க்கு பவுல் தான் தலைவர், அவர்தான் அதிகால சாட்சி என்பதை எல்லாரும் ஒப்புக்கொள்கிறார்கள். அதனால் தான் ஜான் டாம்னிக் கிரோசனும் மார்கஸ் பார்கும் இயேசுவின் வாழ்வில் சிலுவை இருந்ததில் எந்தவித சந்தேகமும் இல்லை என்று அடித்து கூறுவதோடு அது மறுக்கமுடியாத நிகழ்வு என்றும் கூறுகின்றனர்.

**ஆன்கர்பெர்க்:** இயேசு கருத்தரங்கின் தலைவர்களில் ஒருவரான, ஜான் டாம்னிக் கிரோசன், பீட்டர் ஜென்னிங்க்சுடனான ABC நிகழ்ச்சியில் இயேசுவின் சரீரம் சிலுவையிலிருந்து இறக்கப்பட்டது என்றும், அது ஒரு குப்பையில் வீசப்பட காட்டு நாய்கள் அதை தின்றது என்றும் கூறினார். நான் டாக்டர். ஹேபெர்மேசிடம் இந்த அறிக்கைக்கு வரலாற்று ஆதாரம் இருக்கிறதா என்று விளக்கமாக கூறிட கேட்டுக்கொண்டேன்.

கேரி ஹேபெர்மேஸ்:.ஒருவேளை இது கேட்க்க சுவாரஸ்யமாக் ஐருக்கலாம் ஆனால் அவரிடம் இதை நிரூபிக்க  எந்த ஆதாரமும் இல்லை அவருடைய நண்பர்களும் அவருக்கு துணை நிற்கவில்லை மேலும் அவருடைய கூற்று அவருக்கு எந்த விதத்திலும்

உதவவில்லை. இதற்கு ஒரு காரியத்தை சொல்ல விரும்புகிறேன், இயேசுவுக்கு நடந்த ஒரு காரியத்தை ஒன்றுமில்லாததுபோல காண்பிக்க நினைக்கிறோம். அவர் அடக்கம் பண்ணப்பட்டார் என்று சொல்ல நமக்கு பல காரணங்கள் இருக்கிறது, அவர் அடக்கம் பண்ணப்பட்டிருந்த கல்லறை காலியாக இருந்தது. இருந்தாலும், எந்த இடத்திலும், அவர் பொதுவான கல்லறையில் வைக்கப்பட்டதாக சொல்லப்படவில்லை. சரி, ஒருவேளை நீங்கள் சிலுவையில் அறையப்பட்டவர்களுக்கு அப்படிதான் செய்யப்படும் என்று சொல்லலாம், ஆனா பாருங்க, இயேசுவின் காரியத்தில் அப்படி நடக்கவில்லை என்பதற்கான தெளிவான ஆதாரங்கள் நம்மிடம் இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** நாம் பார்க்க இருக்கும் அடுத்த உண்மை என்னவென்றால் இயேசு சகல மரியாதையோடு கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார். டாக்டர். வில்லியம் லேன் கிரேக் இந்த உண்மைக்கான ஆதாரத்தை பற்றி கூறுகிறார்.

**டாக்டர் வில்லியம் லேன் கிரேக்**:..பீட்டர் ஜென்னிங்க்ஸ் ABC ஸ்பெஷலில் சுவிசேஷங்களை குறித்து சொல்லும்போது ஒரு காரியத்தை நான் யூகித்து பார்த்தேன், இயேசு அவருடை தாய் மற்றும் நண்பர்களால் கல்லறையில் வைக்கப்பட்டார். சரி, ஒருவேளை இயேசுவின் அடக்கம் ஆதிகால கிறிஸ்தவ சபையினரால் சொல்லப்பட்ட ஒரு காலங்கடந்த கதையாக இருந்தால், நிச்சயம் அந்த காரியங்களை பற்றி அறிந்துகொள்ள எதிர்ப்பார்ப்பை உண்டாக்கிடும் - இயேசு அவரது தாயார் மற்றும் உண்மையான சீஷர்களால் அடக்கம் பண்ணப்பட்டார்.

ஆனால் ஒரு விதத்தில், சுவிஷேஷத்தில் இப்படி சொல்லப்படவில்லை. மாறாக, நசரேயனாகிய இயேசு ஒரு புதிரான ஒரு மனிதரால் அடக்கம் பண்ணப்பட்டதாக சுவிசேஷங்கள் கூறுகிறது, அர்மத்தியனான யோசேப்பு, சுவிசேஷங்களை தவிர வேறு எந்த இடத்திலும் அவர் பேசப்படவில்லை, எதிர்ப்பார்ப்பிற்கு விரோதமாக இருக்கிறது, அவர் நசரேயனாகிய இயேசுவுக்கு மரியாதையான அடக்கத்தை செய்கிறார். அதோடுகூட, மாற்கு கூறுகிறார் இந்த நபர் சனகரிப் சங்கத்தின் அங்கத்தினாறாம், இந்த சங்கம்தான் இயேசுவை சிலுவையில் அறியவேண்டும் என்று கட்டளை பிரப்பித்தவர்கள் அப்படிப்பட்ட கூட்டத்திலிருந்து யோசேப்பு தனித்து நின்று சிலுவையில் அறையப்பட்டவருக்கு குற்றவாளிகளுக்கு செய்யப்படுவது போல பொதுவான இடத்தில் எறிந்திடாமல் சகல மரியாதை செலுத்தி அவருடைய உடலை அடக்கம் பண்ணினார். இது அசாதாரமான காரியம் இதற்கு விளக்கம் அவசியம்.

**ஆன்கர்பெர்க்:** ஒகே. அப்படியென்றால் இது எதற்காக முதன்மையாக நிற்கிறது, ஜான் டாமினிக் கிரோசனின் சூத்திரத்தினபடி அவர் குப்பையில் வீசப்பட்டு நாய்கள் அவரை தின்றது என்பது ஏன் முதன்மையாகிறது?

**கிரேக்**:..இயேசுவின் அடக்கத்தை பற்றிய பதிவுகள் மறுக்கமுடியாதவைகள் தனிப்பட்ட காரியங்கள் அந்த ஆதாரத்தை ஆதரிக்கிறது. முக்கியமான காரியம் என்னவென்றால் புதிய ஏற்ப்பாட்டில் ஆதிகாலத்தின் காரணிகள் பலவிதங்களில் இணைக்கப்பட்டிருகிறது.

**ஆன்கர்பெர்க்:** எங்கே?

**கிரேக்**:..உதாரணமாக, பவுலினால் அளிக்கப்பட ஆதிகால பாரம்பரிய எழுத்தில் 1 கொரிந்தியர் 15 மூன்றாவது வரி இப்படியாக கூறுகிறது "...கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மறித்து அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து தரிசனமானார்." (1 கொரி.15:3-4)

இந்த பகுதியின் இரண்டாம் வரி இயேசுவின் அடக்கத்தை குறிக்கிறது. இந்த காரியம் இயேசு சிலுவயில் அறையப்பட்டதற்கு 5 வருடங்களுக்கு பிறகு எழுதப்பட்டது. எனவே இது பல ஆண்டுகள் சகாப்தம் படைத்த ஒரு கதையை எழுத அது இப்படி சுவிஷேஷங்களில் எழுதப்பட்டிருக்கலாம் என்று சொல்ல முடியாது.

அதோடு, ஒரு பக்கத்தில் இந்த காரியத்தை சுவிசேஷங்களோடும் அம்றொரு புறத்தில் அப்போஸ்தலர்களின் நடபடிகளோடு ஒப்பிடும்போது, ஆதிகால கிறிஸ்தவர்களின் பிரகடனம் இதன் அடிப்படியில்தான் இருந்தது எனபது தெளிவாகிறது சிலுவை மரணம், அர்மத்தியனான யோசேப்பினால் கல்லறையில் அடக்கம், இயேசுவின் உயிர்த்தெழுதல், கல்லறை வெறுமையாக இருந்ததை கண்டறிதல், பலருக்கும் இயேசு தரிசனமானார் என்ற சாட்சிகள். எனவே சொல்லப்படும் காரியங்களுக்கும் அவரது அடக்கத்திற்கும் பலதரப்பட்ட ஆதாரங்கள் நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** இதைதான் வரலாற்று நிபுணர்கள் கேட்க்கிரார்களா?

**கிரேக்**:..இன்றைய புதிய ஏற்பாட்டு வல்லுனர்களில் பெரும்பாலானோர் இயேசுவின் அடக்கத்தை பற்றிய ஆதிகால பதிவுகள் வரலாற்றில் இயேசுவை பற்றி சொல்லப்பட்டிருப்பதற்கு சிறந்த ஆதாரம் என்கின்றனர்.

**ஆன்கர்பெர்க்:** மூன்றாவது உண்மையை பார்க்கலாம், இயேசுவின் மரணம் சீஷர்கள் தங்கள் தைரியத்தை இழந்து அவருடைய வாழ்வு முடிந்துவிட்டதென்ற அவநம்பிக்கையை ஏற்ப்படுத்தியது.

கேரி ஹேபெர்மேஸ்:.ரைட். இந்த காரியம் சுவிசேஷங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது மாற்கு 16ல் சொல்லப்பட்டதை பொறுத்திருக்கிறது. ஆனால் இந்த காரியத்தை விமர்சகர்கள் ஏற்றுக்கொள்வதற்கு காரணம் என்னவென்றால் இதற்கு பின்னால் இருக்கும் உளவியல் மாற்றத்தை நிராகரிக்க முடியாது. உங்களுடைய நெருங்கிய நண்பர் உங்களுடைய வாழ்வின் 3 ½ ஆண்டுகள் அவருக்காக இருந்து அவர்தான் உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் நம்பிக்கை கனவு என்றிருந்தவர் மரித்தால் எப்படியிருக்கும், சீஷர்கள் அதிகமான கற்பனையில் இருந்தனர், ஹே, உங்க வலது புறம் இடது புறம் நாங்க உட்காரலாமா, அதாவது, அவர்தான் எதிர்காலம் என்றிருந்தனர். அவர் உங்களை விட்டு பிரிக்கப்பட்டார். கொடூரமான வித்தத்தில் பிரிக்கப்பட்டார், அதினால் யூதர்களுக்கு பயந்து உங்களை ஒலித்துகொள்ளும் நிலை உருவானது, யோவான் சுவிசேஷத்தில் சொல்லப்படுகிறது எல்லாம் ஒரு நொடி பொழுதில் மாறிப்போன நிலை உண்டானது. அவர் மரித்துபோனார் மறுபடியும் மீன் பிடிக்க போகலாமா என்று யோசித்துக்கொண்டு அமர்ந்திருக்கிறீர்கள். உளவியல் ரீதியாக பார்க்கும்போது இது அசாத்தியமான காரியம் தான். புதிய ஏற்ப்பாட்டின் பகுதிகளை உயிர்ப்பிக்கும்படி உளவியல் உட்புகுந்தது. இப்படிப்பட்ட காரியத்தை கடந்தபிறகு எப்படி அவர்களுக்குள் ஒரு ஜெய கோஷம் உண்டானது?

*****

**ஆன்கர்பெர்க்:** இப்போதுதான் பார்கிறீர்கள் என்றால். எல்லா மேதைகளாலும் ஒப்புக்கொள்ளப்படும் இயேசுவின் வாழ்வின் மறுக்கமுடியாத 12 வரலாற்று உண்மைகளை பற்றி பார்த்துக்கொண்டிருக்கிறோம். கேள்விகளுக்கு பதிலளிக்க விரும்புகிறோம், இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தார் என்ற முடிவிற்கு வரலாட்ட்று ஆதாரங்கள் நம்மை கொண்டு செல்கிறதா? சித்தாந்த மேதை, டாக்டர். எயல்லியம் லேன் கிரேக் உண்மையின் ஆதாரங்களை முன்வைக்கிறார்.

**கிரேக்**:..இந்த நான்கு உண்மைகள் - இயேசுவின் கனப்படுத்தப்பட்ட அடக்கம், அவருடைய கல்லறை காலியாக இருந்ததை கண்டறிதல், இயேசுவை தேவன் உயிரோடெழுப்பினார் என்ற சீஷர்களின் விசுவாசத்தின் ஆரம்பம் - புதிய ஏற்ப்பாட்டை பற்றிய பலவிதமான கண்ணோட்டங்களை குறித்து எழுதியவற்றை கூறுகிறது. ஒரு காரியத்தை முன்வைக்கிறேன், அடிப்படை காரியங்களை விவாதிக்கும் குறுகிய மனப்பான்மையுடையவர்களை பற்றி பேசவில்லை, பலவற்றை கற்றுதேர்ந்த பரந்த கண்ணோட்டமுடையவர்களை பற்றி கூறுகிறேன். இதை மறுக்கிற புதிய ஏற்ப்பாட்டின் நிபுணர்களின் ஒரு பகுதியினர் இன்னும் விமர்சிக்கிரவர்களாக மாறுகின்றனர். ஆனால் இந்த காரியத்தை பற்றி எழுதிய பெரும்பாலான நிபுணர்கள் அந்த அடக்கத்தையும் உயிர்த்தெழுந்த சரீரத்தின் தரிசனத்தையும் இயேசுவின் உயிர்த்தெழுதலில் சீஷர்களுக்கு இருக்கும் விசுவாசத்தையும் ஒப்புக்கொள்கிறார்கள்.

சரி, குறிப்பாக காலியான கல்லறையை பற்றி பார்க்கும்போது, இந்த கருத்தை பற்றி எழுதிய பெரும்பாலான மேதைகள் அந்த ஞாயிறு காலையில் வந்த இயேசுவின் பெண் சீடர்கள் இயேசு

வைக்கப்பட்டிருந்த கல்லறை காலியாக இருந்ததாக கண்டதை ஒப்புக்கொள்கிறார்கள். இதிலிருந்து மாற்குவில் சொல்லப்பட்டிருப்பதுபோல கல்லறை காலியாக இருந்ததென்று வரலாறும் நிரூபிப்பதை அறியலாம்.

**ஆன்கர்பெர்க்:** ஏன் அது நம்பப்படதக்கது என்கின்றனர்?

**கிரேக்**:..காலியான கல்லறை என்ற சம்பவம் பலதரப்பட்ட ஆதாரங்களை கொண்டதாக இருக்கிறது. உதாரணமாக, நான் ஏற்கனவே சொன்னதுபோல, அடக்கம் பண்ணப்பட்ட பதிவில் வெறுமையான கல்லறையும் அடங்கும். இயேசுவின் அடக்கம் பற்றிய பதிவு வரலாற்றில் துல்லியமாக இருந்தால், கல்லறை காலியாக இருப்பதை பார்த்த சம்பவம் நம்பப்படமுடியாததாக இருக்க வாய்ப்பில்லை ஏனென்றால் மூடப்பட்ட கல்லைரையிளிருந்து உயிர்த்தெழுதலை பற்றிய விசுவாசம் தோன்றியிருக்க எந்தவித வாய்ப்பும் இருந்திருக்காது.

இரண்டாவதாக, காலியான கல்லறை என்ற காரியம் ஆதிகால நிகழ்வுகளோடு பலவிதங்களில் தனிப்பட்டவித்ததிலும் பொருந்தியிருக்கிறது. அது பிரீ மார்க்கன் பேஷனோடு இணைக்கப்பட்டிருக்கிறது, இந்த விதத்தை தான் மாற்கு சுவிசேஷத்தை எழுத பயன்படுத்தினார். ஆனால் வெறுமையான கல்லறையை பற்றி தனிப்பட்ட பதிவுகளை மத்தேயு லூக்கா யோவானிலும் பார்க்க முடியும். இதுதான் ஆதாரம், உதாரணமாக, மத்தேயுவை பொறுத்தவரை அவர் வெறுமையான கல்லறையை பற்றி கூறும்போது சற்று வித்தியாசமாக காவலர்களை பற்றி சொல்கிறார் அதை தவிர

வேறு எதையும் மேம்படுத்திட வில்லை அவர் அந்த காலத்தின் கலாசாரத்தை சார்ந்து இருப்பது தெரிகிறது.

பல மேதைகளுடைய கருத்து என்னவென்றால் மற்ற மூன்று சுவிசேஷங்களை காட்டிலும் யோவானில் காலியான கல்லறையை பற்றியும் இயேசுவின் அடக்கத்தை பற்றியும் தனித்துவமாக சொல்லப்பட்டிருக்கிறது. நான் நினைக்கிறேன் இந்த காலியான கல்லறையை பற்றி பவுல் கூறிய விஷயத்தில் சேர்த்திருப்பது சரியானதே 1 கொரிந்தியர் 15. அந்த கூற்றின் மூன்றாவது வரியை கவனிக்கும் போது, “அவர் வேதவாக்கியங்களின் படியே மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்,” (1 கொரி.15:4) வெறுமையான கல்லறையை பற்றி கூறிடும் அந்த மூன்றாவது வரி சுவிசேஷங்களில் சொல்லப்பட்டவைகளோடும் அப்போஸ்தலர்களின் நடபடிகளில் சொல்லப்பட்ட பிரசங்கங்கலோடும் ஒத்திருக்கிறது. எனவே, காலியான கல்லறையை பற்றிய விரிவான காரியத்தை சுருக்கமாக எடுத்துரைப்பதாக அமைந்திருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** ஆதிகால வரலாற்று பதிப்புகள் கூறுகிறது இயேசுவின் கல்லறை காலியாக இருந்ததை முதலில் கண்டறிந்தவர்கள் பெண்கள். dr. கிரேக் அது ஏனென்று கூறுகிறார், ஒருவேளை ஆக்கியோன் இயேசுவை பற்றிய உண்மையை கண்டரிந்திருந்தால், அவன் காலியான கல்லறையை பார்த்த பெண்ணை அங்கு குறிப்பிட்டிருக்க மாட்டான்.

**கிரேக்**:..காலியான கல்லறையை பற்றி வரலாற்றில் நம்பப்படும் சுவாரஸ்யமான மற்றொரு விஷயம் என்னவென்றால் கல்லறை காலியாக இருப்பதை கண்டறிந்தது ஒரு பெண். சரி, இது ஏன்

மறுக்கமுடியாதது என்பதை கவனிக்க வேண்டும், முதல் நூற்றாண்டின் யூத சமுதாயத்தில் பெண்களின் நிலையை பற்றி 2 காரியங்களை புரிந்துகொள்ள வேண்டும். முதலாவதாக, பெண்கள் எல்லாரும், இரண்டாம் நிலையிலுள்ள பிரஜைகளாக கருதப்பட்டனர். உதாரணமாக, ஒரு ரபீனிக் பழமொழி இருக்கிறது, “ஆண் பிள்ளைகளை பெற்றவன் ஆசீர்வதிக்கப்பட்டவன், பெண் பிள்ளையை பெற்றவனுக்கு ஐயோ என்பார்கள்.” பெண்கள் ஒரு பொருட்டாக எண்ணப்படாத காலம் எனபது விளங்குகிறது.

இரண்டாவதாக, பெண்களின் பேச்சை நம்பக்கூடியதாக ஒப்புக்கொள்ள மறுத்தனர் யூத நீதி மன்றத்தில் அவர்கள் சாட்சி சொல்ல அனுமதிக்கப்படுவதில்லை. சரி, இந்த வெளிச்சத்தில் பார்க்கும்போது, பெண்கள் இந்த சம்பவத்தை பார்த்த முதல் சாட்சி என்பது எப்படி இருந்திருக்கும் என்று யோசித்துபாருங்கள், அவர்கள் தான் கல்லறை வேருமையாயிருப்பதை கண்டுபிடுத்தார்களா? பிற்காலத்தில் உண்டான மற்ற பதிவுகள் ஆண்கள் கண்டறிந்ததாக கூறியிருக்கும், அதாவது, பேதுருவும் யோவானுண், கல்லறையினிடத்திற்கு வந்து அது வெறுமையாய் இருப்பதை கண்டனர். தாங்கள் சொல்லும் காரியத்தை ஒரு பொருட்டாக மதிக்காத சமுகத்தில் அவர்கள் தான் காலியான கல்லறையை கண்ட முதல் சாட்சிகளாக இருக்கிறார்கள் இதில் புரிந்துகொள்ள வேண்டிய விஷயம் நம்பினாலும் இல்லாவிட்டாலும், காலியான கல்லறையை பார்த்தது அவர்கள் தான் சுவிஷேஷங்களில் இப்படி எழுதப்பட்டிருப்பதை அவர்கள் கனவீனமாக அவமானமாகவும் நினைக்கின்றனர்.

கேரி ஹேபெர்மேஸ்:.ஒன்று, சுவிசேஷத்தில் கூறியிருப்பவைகளை விளக்க விரும்பினால் அதை பற்றி பிரசங்கிக்க விரும்பினால், நீங்கள்,

உங்களுடைய முதல் சாட்சியாக பெண்களை நிறுத்தாதீர்கள் அதை அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. லூக்கா 24:11 சொல்வதுபோல், உங்கள் பார்வையாளர்கள் அவர்களை ஏற்றுக்கொள்வதில்லை, இயேசுவே அவர்கள் முன்பு தோன்றாதபடியால் இவர்களை ஏன் நிருத்துகிறீர்கள்? பெண்களுடைய சாட்சி முக்கியம் வாய்ந்ததாகும்.

இரண்டு, காலியான கல்லறை தெளிவாக பிரசங்கிக்கப்பட்டது. பவுல் சொல்வதை பார்க்கிறோம் 1 கொரிந்தியர் 15ல் அவர் மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார், எது கீழே அனுப்பப்பட்டதோ அது மேலே வந்தது, எது மேலே வந்ததோ அது காணப்பட்டது.

இந்த காரியங்கள் எருசலேமில் பிரசங்கிக்கப்பட்டதற்கு ஆதாரம் இருக்கிறது. நான் உங்களுக்கு சொல்லுகிறேன் நீங்கள் உயிர்த்தெழுதலை பற்றி கூற விரும்பினால் காலியான கல்லறையிலிருந்து துவங்குங்கள் - ஆனால் அதுதான் துவக்கம் என்று சொல்ல முடியாது, வெளிப்படுதல் மிகவும் அவசியமானதாக இருக்கிறது. ஆனால் நீங்க பெண்களை பயன்படுத்த விரும்ப மாட்டீர்கள் என்றும் கூடியவரை சீக்கிரத்தில் சொல்லி முடிக்க விரும்ப மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். கொஞ்சம் கொஞ்சமாக சொல்ல விரும்புவீர்கலேன நினைக்கிறேன்.

ஆனா மூன்றாவது, அதை எருசலேமில் செய்யாதீர்கள். அந்த இடத்தில் இதை நிராகரித்திடுவார்கள். ஏன்னா யூத தலைவர்களும் ரோமர்களும் அந்த சரீரத்தை வெளியே கொண்டுவர விரும்பினால், அப்போதும் சில விமர்சகர்கள் சொல்வார்கள் 50 நாளில் அந்த சரீரம் எப்படி இயருக்கும்? இன்னுமா, "பாரு." அவங்க சொல்வாங்க, :ஹே, முட்டாளே, இன்னும் அந்த துணி இருக்கு அவர் சிலுவையில் அறையப்பட்டார். பாருங்க

பசங்களா, இதை பற்றி என்ன சொல்வீங்க? சோ எருசலேம் தவறான இடமாக கருதப்படுகிறது.

அந்த கல்லறை காலியாக இருகிறது என்று கூறும் சில தகவல்களை நாம் வைத்திருக்கிறோம் அதிலிருந்து துவங்கிடலாம், இதுதான் அந்த இடம், இதோ ஒரு பெண், இதுதான் ஆதிகால உபகரணங்கள், இதிலிருந்து உயிர்த்தெழுதலை பற்றி சிறந்த செய்தியை துவங்கலாம் என நினைக்கிறேன்.

**ஆன்கர்பெர்க்:** சரி, அடுத்தவாரம் இயேசுவின் உயிர்த்தெழுதலை பற்றி இன்னும் பல ஆதாரங்களை பார்க்க இருக்கிறோம். ஒரு கேள்வியை உங்களிடம் கேட்க்கிறேன்: ஒருவேளை ஆதாரங்கள் இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தார் என்பதை நிரூபித்தால் என்னவாகும்? உங்களுக்கு அது எப்படியிருக்கும்? மற்ற காரியங்களை விட இயேசு தம்மை குறித்து கூறியிருப்பவை உண்மை எனபது நிருபனமாகும், அவரே தேவனுடைய மெய்யான குமாரன். பலருக்காக அவருடைய ஜீவனை பலியாக கொடுக்க இந்த பூமிக்கு வந்தார், அவர், சிலுவையில் உங்களுடைய என்னுடைய பாவங்களுக்காக மரித்தார்.

இயேசுவின் வாழ்க்கையை பற்றிய உண்மைகளை அறிந்தபிறகு, அவர் தேவனுடைய குமாரன் மரணத்திலிருந்து உயிர்த்தார் என்று அறிவாற்றலுடன் சொல்வது, அவரோடு உங்களுக்கு எந்த உறவையும் ஏற்படுத்தவோ உங்களுடைய பாவங்கள் பண்ணிக்கப்படவோ, நீங்கள் பரலோகம் செல்லவோ ஏதுவாயிருக்காது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் நீங்கள் உங்களுடைய சகல நம்பிக்கையையும் உங்களில் இருந்து விளக்கி இயேசுவில் நம்பிக்கையை வைக்க நேர்ந்திடும். நீங்கள் ஒரு பாவி என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும், இந்த நிமிடத்திலிருந்து உங்களுடைய பாவங்களை மன்னிக்க வல்லவரான அவரை

நம்போவதாக அவரிடம் சொல்லுங்கள், உங்களுக்கு நித்திய ஜீவனை ஈவாக அளித்து உங்கள் வாழ்வில் வந்து வாசம்பண்ண அவரை அழைத்திடுங்கள்.

நீங்கள் விரும்பினால், இப்போதே இயேசுவோடு ஒரு ஐக்கியத்திற்குள் நீங்கள் வர முடியும். அதை செய்ய விரும்புகிறீர்களா? அப்படினால், இந்த ஜெபத்தை என்னோடு சேர்ந்து செய்யும்படி உங்களை அழைக்கிறேன், “அன்பின் தேவனே, நீர் தேவனுடைய குமாரன் என்பதை நான் நம்புகிறேன். என்னுடைய பாவங்களுக்கு பலியாக நீர் சிலுவையில் மரித்தீர் என நம்புகிறேன். நீர் மூன்றாம் நாளில் மரணத்திலிருந்து உயிர்த்து இன்றைக்கும் ஜீவனுள்ளவராக இருக்கிறீர். என்னுடைய வாழ்வில் உங்களை வரவேற்கிறேன். இந்த நிமிடத்திளிருந்து, உம்மை என் இரட்சகராக என் தெய்வமாக ஏற்றுக்கொள்கிறேன். உம்முடையவனாக என்னை ஏற்றுக்கொண்டதற்காக உமக்கு நன்றி. ஆமென்

சரி, இந்த ஜெபத்தை நீங்கள் செய்திருந்தால், வேதம் கூறுகிறது, “அவருடைய நாமத்தை நோக்கி கூப்பிடுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்.” அதை தான் இன்று தேவன் உங்களுக்கு வாக்களிக்கிறார். உங்களை இரட்சித்திடுவார். ஒரு மனிதன் செய்யக்கூடிய சிறந்த ஜெபம் இதுதான்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.